Koviloor Digital Library

முருக மந்திரம்

கவிதை நூல்



ACC.No. 29601
A2111 315

பாவாக்கம் :

Dr. பெரி. இராமசாமி MS (Ortho), FRCS.
எலும்பு மருத்துவ அறுவை சிகிச்சை நிபுணர், திருச்சி.

Koviloor Digital Library

Koviloor Digital Library 3-5

பேராசிரியர் முனைவர் மகாகவி
அர சிங்காரவடிவேலன் (எ) அரசி,
8, வ.உ.சி. தெரு, கண்டனூர்.

அணிந்துரை வாழ்த்து

'முருக மந்திரம்' என்ற கவிதை நூலின் ஆசிரியர், திருச்சி காவேரி மருத்துவ மையத்தின் எலும்பு அறுவை சிகிச்சைத் துறையின் தலைவராகவும், எலும்பு சிகிச்சை நிபுணராகவும் சேவை செய்கிறார். அவர் கண்டனூரைச் சேர்ந்த என் பங்காளி. என் தம்பி திரு. பெரியகருப்பன் செட்டியார், திருமதி. சகுந்தலா ஆச்சியின் மைந்தர். பள்ளிப் பருவத்திலேயே 'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்ற முதுமொழிக்கு கண் கண்ட சான்றாக விளங்கினார். கோட்டையூர் முத்தையா அழகப்பா மேல்நிலைப் பள்ளியில் படித்த மாணவ செல்வங்களில் முத்தாக விளங்கியவர். அவர் பள்ளிப் படிப்பை முதல் தர மாணவராக படித்து முடித்து இலண்டன் சென்று FRCS பட்டமும் பெற்று, திருச்சியில் எலும்பு அறுவை சிகிச்சை வல்லுனராக விளங்கி வருகிறார். அவர் எலும்பு அறுவை சிகிச்சையை விளையாட்டாக கவிதை இயற்றுகிற கலை போலவும் செய்து வருகிறார். தன் துறையில் வல்லமையோடு பணிவும் இரக்க குணமும் வாய்ந்தவராக விளங்குகிறார். அவர் அறுவை சிகிச்சையைக் கலை போலச் செய்து வருகிறார் என்பது 'முருக மந்திரம்' என்ற கவிதை நூலைப் படித்த போது எனக்கு புலனாகியது. அவர் மனித உடலை மயிலாகவும், மனித உயிரை உடலில் புகுந்து அதை இயக்கும் கடவுளாகவும் கருதி வணங்குகிறார்

Koviloor Digital Library

என்பது கவிதை நூலில் முருகனை வர்ணிக்கும் முறையில் தெரிகிறது. அவர் தன்னுடைய அறுவை சிகிச்சைக் கருவியை முருகனுடைய வேலாகக் கருதுகிறார். எலும்பு முறிவு நோயை சூரனாகக் கருதி அறுவை சிகிச்சை கருவியை வேலாகக் கொண்டு நோயெனும் சூரனை அழிக்கிறார்.

அவர் துறை வேறாக இருப்பதால் அவரின் யதார்த்தக் கவிதையில் சிறு குறைபாடு இருந்தாலும் கவிதையில் முருகனைப் பற்றிய பக்தியும் ஈடுபாடும் நன்கு தெரிகிறது.


தமிழ் நூல்களை, குறிப்பாகக் கவிதை நூல்களை, இன்னும் அதிகமாக படித்து அறுவை சிகிச்சைத் துறையில் கொடி நாட்டியது போல, கவிதைத் துறையிலும் கொடி நாட்டி, பேரும் புகழும் பெற்று எல்லா நலங்களோடும் இனிது வாழ எம்பெருமான் முருகனை வேண்டி வணங்கி வாழ்த்துகிறேன்.

நன்றி,

அன்பன்,

அர சிங்காரவடிவேலன்

27 / 11 / 2012


KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 29601

Koviloor Digital Library

3-5

முருக மந்திரம்

காப்பு

ஆரணம் அருகே ஆலயம் முதலே !
ஆரமும் எருக்கே ஆதியின் எழுத்தே !!
தோரணை களிறே தோற்றமும் கரியே !
தாரமும் வரவே தனித்திரு நிலையே !!

வாரணம் வடிவே மாதிரம் முகமே !
வாருமென் எதிரே வளர்பிறை சதுரே!!
மாரணி சரமே மோதகப் பிரியே !
மேருவின் உயரே மேவிடும் பொலிவே !!

ஊரணிக் கரையே ஊன்றிய திருவே !
ஊரொரு அரசே ஓரிடம் தருமே !!
காரணம் பலவே காரியம் தொடவே !
கோரிடும் கணமே கூடிடும் கரமே !!

வெண்பா

காலும் கடுத்திருக்க காவடி தோளிருக்க
பாலும் குடமிருக்க பாடல் பலித்திருக்க
வேலும் நிமிர்ந்திருக்க வீறு நடையிருக்க
மாலென் உளமிருக்க வா.

குறள்

குடும்பம் நலம்பெறக் கும்பிட்ட கையே
கடம்பன் பதம்பற்றக் காண்.

Koviloor Digital Library

உயிரொலி

அரகர	மந்திரம்	ஆனாய்	கந்தா
அருள்தரு	முகமே	ஆறாம்	கந்தா
ஆறும்	மனத்தில்	அமர்ந்தாய்	கந்தா
ஆறில்	உறையும்	அறிவே	கந்தா
இருக்கும்	கூட்டின்	இன்னுயிர்	கந்தா
இறுக்கும்	இன்னல்	ஈர்ப்பாய்	கந்தா
ஈரரும்	தேவியர்	இடையில்	கந்தா
ஈரே	முலகின்	இறையே	கந்தா
உருகும்	உடலில்	உயிரே	கந்தா
உறவின்	உருவில்	உதித்தாய்	கந்தா
ஊறும்	எண்ணம்	உள்ளில்	கந்தா
ஊரும்	வணங்கும்	உனையே	கந்தா
எறியும்	வேலில்	இருப்பாய்	கந்தா
எரியும்	தருணம்	ஏற்பாய்	கந்தா
ஏறதே	றியவர்	ஈசன்	கந்தா
ஏடெடுத்	துனையே	ஏற்றான்	கந்தா

Koviloor Digital Library

ஐரா	வதமுன்	அடியில்	கந்தா
அயரா	துணைநான்	அழைப்பேன்	கந்தா
ஐயம்	மனத்துள்	அகலும்	கந்தா
ஐயா	எனதுள்	அகலே	கந்தா
ஒன்பது	கோளும்	உன்னுள்	கந்தா
ஒன்றாய்	சேர்ந்தே	ஒளிரும்	கந்தா
ஓங்கா	ரத்தின்	ஒலியே	கந்தா
ஓமெனும்	மந்திரம்	உரைத்தாய்	கந்தா
ஔவை	பாடிய	அரும்பழம்	கந்தா
ஔடத	மேனி	அணிந்தாய்	கந்தா
அஃகும்	மனமும்	அகலும்	கந்தா
எஃகும்	காக்கும்	என்றும்	கந்தா

Koviloor Digital Library

மெய்யொலி

உக்கிர	சிவன்கண்	ஒன்றில்	எழுந்தாய்
அக்கினி	பிழம்பு	ஆறில்	ஒளிர்ந்தாய்
திங்கள்	போலறு	தேவதை	வந்தார்
தாங்கப்	பொய்கைத்	தாமரை	தந்தார்
பச்சிளம்	ஆறு	பாலர்	இருந்தார்
உச்சி	முகந்திட	உமையாள்	இருந்தாள்
அஞ்சோ	டொன்றாய்	அறுமுகம்	தந்தாள்
அஞ்சா	நெஞ்சம்	அமரனுக்	களித்தாள்
மொட்டாய்	பிறந்தாய்	வைகா	சியிலே
நட்சத்	திரமாம்	விசாகந்	தனிலே
விண்ணில்	பார்வதி	வேலை	எடுத்தாள்
தண்டத்	தைப்பூ	சத்தே	கொடுத்தாள்
பத்மன்	சிவனிடம்	பல்வரம்	பெற்றான்
அத்தனை	தேவரை	அடைசிறை	வைத்தான்
இந்திரன்	போரில்	இறங்கி	இருந்தான்
மந்திர	மாயம்	மறந்தும்	இருந்தான்

Koviloor Digital Library

ஐப்பசி சஷ்டி அதிர எழுந்தாய்
தப்பிய சூரனைத் தகர்த்து மகிழ்ந்தாய்
சம்மதம் பங்குனி உத்தரம் என்றாய்
சம்முகம் தெய்வ சேனை மணந்தாய்

மய்யக் காட்டில் தையல் இருந்தாள்
மெய்யை மறைத்து வள்ளி மணந்தாய்
கார்த்திகை ஆறுமுகம் ஓர்முகம் ஆனாய்
பார்த்திட பார்வதி பரவசம் ஆனாள்

கல்லில் இடும்பன் காவடி வைத்தான்
நில்லென வாயிலில் நிறுத்தி வைத்தாய்
கவ்வும் அரவுக் கிரணம் கண்டாய்
இவ்வுல கிருளை எளிதாய் வென்றாய்

துள்ளித் தாவும் தமிழாய் வந்தாய்
அள்ளக் குறைய அமுதாய் வந்தாய்
விழ்ந்த வாழ்வில் விளக்காய் வந்தாய்
தாழ்ந்த தருணம் தருவாய் வந்தாய்

சுற்றும் மனத்தில் சுடராய் வந்தாய்
முற்றம் ஆறு முகமாய் வந்தாய்
முன்னும் பின்னும் முருகா வந்தாய்
இன்னல் நீக்கி என்னைக் காப்பாய்

Koviloor Digital Library

உயிர் மெய்யொலி

கரங்கள்	தம்மில்	கதிர்வேல்	கந்தா
காவடி	தூக்க	கடுந்தோள்	கந்தா
கிழக்குச்	செந்தூர்	அழகே	கந்தா
கீழைக்	கரையின்	எழிலே	கந்தா
கும்பிட்	டவர்க்கு	கோடைகள்	கந்தா
கூப்பிட்	டவர்க்கு	கோடிகள்	கந்தா
கெஞ்சு	தலே என்	கீதம்	கந்தா
கேட்ப	திலே ஏன்	கோபம்	கந்தா
கைகள்	பன்னிரு	காவல்	கந்தா
கைமா	றே என்	கானம்	கந்தா
கொஞ்சும்	தமிழின்	குரலில்	கந்தா
கோவில்	எங்கும்	கொண்டாய்	கந்தா
கௌரவம்	பழனி	காக்கும்	கந்தா
கௌமர	சித்தர்	கண்டாய்	கந்தா
கக்கன்	டுன்முன்	கசக்கும்	கந்தா
கக்கிய	சொல்லும்	கந்தா	கந்தா

Koviloor Digital Library

சஷ்டித்	திதி சோ	தனையும்	செய்தாய்
சாமி	மலை போ	தனையும்	செய்தாய்
சிவனார்	பாடம்	சொல்லச்	செய்தாய்
சீடர்	அவரை	தணியச்	செய்தாய்
சுட்ட	பழத்தைச்	சுவைக்கச்	செய்தாய்
சூரன்	படையைத்	தோற்கச்	செய்தாய்
செந்தூர்க்	கோவில்	திறக்கச்	செய்தாய்
சேவற்	கொடிகள்	பறக்கச்	செய்தாய்
சைனியம்	உன்னடி	தாழச்	செய்தாய்
சைவம்	என்றும்	தழைக்கச்	செய்தாய்
சொக்கர்	அருகே	சோலை	செய்தாய்
சோம	வாரத்	தேடல்	செய்தாய்
சௌந்தரம்	என்மனம்	சேரச்	செய்தாய்
சௌக்கியம்	என்னுடல்	சாரச்	செய்தாய்
சக்கைக்	கரும்பாய்	தேகம்	செய்தாய்
சக்கரை	யாயுயிர்	தானும்	செய்தாய்

Koviloor Digital Library

வடத்தை தொட்டேன் வளங்கள் கொடுத்தாய்
வேடா மயிலும் வேலும் கொடுத்தாய்
படியா குன்றாய் கொடையும் கொடுத்தாய்
பாடீர் என்று படையும் கொடுத்தாய்

குடும்பங் கொள்ளக் குன்றம் கொடுத்தாய்
கூடுன் கலந்த காயம் கொடுத்தாய்
ஆடெனக் காவடி ஆட்டம் கொடுத்தாய்
ஓடே உடற்குயிர் ஊட்டம் கொடுத்தாய்

தடையை வெல்லத் தண்டம் கொடுத்தாய்
முடையை போக்கும் விடையும் கொடுத்தாய்
கோடொரு கோடிக் கவிதை கொடுத்தாய்
கூடோர் உறவு கூட்டிக் கொடுத்தாய்

நடவும் நெல்லும் நாத்தும் கொடுத்தாய்
கடவுள் தானாய் காட்சி கொடுத்தாய்
தொடக்கம் தரவே தமயனைக் கொடுத்தாய்
அடக்கம் பெறவே அப்பனைக் கொடுத்தாய்

Koviloor Digital Library

அணங்கினர்	தன்னில்	அலகுகள்	கொண்டார்
ஆணா	யிருப்போர்	அருந்தவம்	கொண்டார்
அணியச்	சந்தன	ஆரம்	கொண்டார்
காணி	ரோவென	காவடி	கொண்டார்
அணுவணு	வெங்கும்	அழகனைக்	கொண்டார்
காணு	ரெல்லாம்	கடம்பனைக்	கொண்டார்
மாணென்	றாலும்	மருதனைக்	கொண்டார்
மூணே	எழுத்தில்	முருகனைக்	கொண்டார்
அணையாய்த்	தாங்க	அமரனைக்	கொண்டார்
துணையாய்	நிற்கச்	சுப்பனைக்	கொண்டார்
வேணொரு	வேலென	வடிவேல்	கொண்டார்
ஆணோர்	பெண்ணோர்	அறுமுகம்	கொண்டார்
தோணொவ்	வாத	நோன்பும்	கொண்டார்
காணொவ்	வாத	கந்தனை	கண்டார்
மணக்கும்	தமிழால்	மாலை	கொண்டார்
இணக்கம்	உன்னடி	இசைந்தே	கொண்டார்

Koviloor Digital Library

தணிகை	மலையில்	தரிசனம்	தந்தாய்
தாரா	சுரனின்	தகனம்	தந்தாய்
திருப்பரங்	குன்றம்	திருமணம்	தந்தாய்
தீர்க்க	சுமங்கலி	திருவருள்	தந்தாய்
துதிக்க	முருக	மந்திரம்	தந்தாய்
தூதாய்	வீர	பாகுவைத்	தந்தாய்
தெய்வ	சேனை	திருமணம்	தந்தாய்
தேவர்	சேனைத்	தலைமை	தந்தாய்
தையில்	பூசத்	தீபம்	தந்தாய்
தைக்குப்	பின்னர்	தான்மகம்	தந்தாய்
தொற்றும்	பிணியை	ஆற்றித்	தந்தாய்
தோற்கும்	என்னை	தேற்றித்	தந்தாய்
தவ்வித்	தாவும்	சலனம்	தந்தாய்
தவ்வா	திருக்கும்	தவமும்	தந்தாய்
தக்க	வைக்கும்	விதியைத்	தந்தாய்
தக்க	சமயம்	மதியைத்	தந்தாய்

Koviloor Digital Library

நடையின் வழியில் நிழலாய் நின்றாய்
நாடும் விழியின் நடுவே நின்றாய்
நினைவில் என்றும் நீங்கா நின்றாய்
நீளும் இன்னல் நீக்கிட நின்றாய்

நுரைபோல் குமிழாய் மறைந்திட நின்றேன்
நூறாம் வயது நிறைவுற நின்றாய்
நெற்றிப் பொட்டில் நிலையாய் நின்றாய்
நேற்றும் இன்றுமென் நாளும் நிற்பாய்

நைந்த மனத்துள் வந்தே நின்றாய்
நைந்தே உருகச் சிந்தாய் நின்றாய்
நொடிகள் வாழ்வில் நிரக்க நின்றாய்
நோய்கள் வேரை நறுக்க நின்றாய்

நாவிரு திசைகள் நோக்கிட நின்றாய்
நாவறு மணியும் நல்கிட நின்றாய்
நக்கீ ரர்படை நடுவினில் நின்றாய்
நற்குற மகளின் நெஞ்சினில் நின்றாய்

Koviloor Digital Library

பங்குனி உத்தரப் பட்டம் பெற்றாய்
பாற்குடம் ஏந்திய பக்தர் பெற்றாய்
பிரணவ மந்திரம் புரியப் பெற்றாய்
பீடம் மீதநை சிவனும் பெற்றார்

புவியைக் காக்கப் படையும் பெற்றாய்
பூவைய ரிருவர் பார்வை பெற்றாய்
பெறாமல் உன்னைப் பார்வதி பெற்றாள்
பேணும் ஆறு பெண்கள் பெற்றாய்

பைங்கனி அமுதுப் படையல் பெற்றாய்
பைந்தமி ழில்திருப் புகழும் பெற்றாய்
பொதிகை மலையில் பொலிவும் பெற்றாய்
போகரின் ஒன்பது நஞ்சும் பெற்றாய்

பௌத்த சமணர் போற்றப் பெற்றாய்
பவ்விய பயத்துடை பக்தர் பெற்றாய்
பக்கம் உன்னை பலமாய்ப் பெற்றேன்
பக்குவ மாயுன் பதத்தைப் பெற்றேன்

Koviloor Digital Library

மயிலின் மீது பறந்து மகிழ்ந்தாய்
மாயச் சூரரை மாய்த்து மகிழ்ந்தாய்
மிளிரும் கார்த்திகை ஒளியில் மகிழ்ந்தாய்
மீளாப் பிணியும் முறித்து மகிழ்ந்தாய்

முருகா மந்திரம் முழங்க மகிழ்ந்தாய்
மூத்தவன் வள்ளியை மிரட்ட மகிழ்ந்தாய்
மெல்லின வள்ளிகை முடித்து மகிழ்ந்தாய்
மேலின தேவியை மணந்து மகிழ்ந்தாய்

மையும் கோலும் வார்த்து மகிழ்ந்தாய்
மையம் உன்னை வைத்து மகிழ்ந்தேன்
மொட்டை போட்டு வேண்டி மகிழ்ந்தேன்
மோட்சம் என்னுள் முகிழ்த்து மகிழ்ந்தாய்

மௌவல் மாலை மாட்டி மகிழ்ந்தேன்
மௌனத் தவத்தை மூட்டி மகிழ்ந்தாய்
மக்கட் பேறு வழங்கி மகிழ்ந்தாய்
மக்கள் நாங்கள் வணங்கி மகிழ்ந்தோம்

Koviloor Digital Library

அ(யு)வுணரை	வெல்ல	அழகா	எழுந்தாய்
யாமே	இருக்க	பயமேன்	எழுந்தாய்
இ(யி)ந்திர	சேனை	ஏற்க	எழுந்தாய்
ஈ(யீ)சன்	கண்தம்	எரிதழல்	எழுந்தாய்
யுகங்கள்	ஆயிரம்	உருண்டும்	எழுந்தாய்
ஊ(யூ)கம்	இல்லை	உடனே	எழுந்தாய்
எ(யெ)ட்டுத்	திக்கும்	எகிற	எழுந்தாய்
ஏ(யே)ழு	உலகை	ஆள	எழுந்தாய்
எய்(யெய்)யும்	மலர்கள்	துய்ய	எழுந்தாய்
எய்(யெய்)யா	அன்பில்	இரங்கி	எழுந்தாய்
ஒ(யொ)ப்பம்	தந்து	ஓமென	எழுந்தாய்
யோகம்	புரிய	யுவனே	எழுந்தாய்
யௌவன	குமரா	யாமென	எழுந்தாய்
எவ்(யெவ்)வனஇருளிலும்		இறையென	எழந்தாய்
எக்(யெக்)காம்இதயம்		இளகிட	எழுந்தாய்
எக்(யெக்)கும்	வினைகள்	விக்கிட	எழுந்தாய்

Koviloor Digital Library

இரத்தின	கிரியில்	வீற்றும்	இருந்தாய்
இராத்திரி	நேரம்	காத்தும்	இருந்தாய்
இரிஷிகள்	ஓதும்	சுரத்தில்	இருந்தாய்
இரீங்கும்	அரகர	ஒலியில்	இருந்தாய்
உருத்திர	சிவனின்	இரட்சையில்	இருந்தாய்
உருபம்	அறுமுகம்	இரட்சித்	திருந்தாய்
இரெண்டாம்	மனைவியர்	இடையில்	இருந்தாய்
இரேவதி	பின்னர்	நான்கில்	இருந்தாய்
உரையாய்	நடையாய்	பாட்டாய்	இருந்தாய்
இரையாய்	நீராய்	காற்றாய்	இருந்தாய்
இரொக்கம்	தீரா	இருப்பி	லிருந்தாய்
இரோகம்	வாரா	உறுப்பி	லிருந்தாய்
இரவும்	பகலும்	அரணாய்	இருந்தாய்
இரௌத்திர	முகத்தை	மறைத்தே	இருந்தாய்
உரக்கப்	பாட	குரல் தந்	திருந்தாய்
இரக்கம்	காட்டி	இசை தந்	திருந்தாய்

Koviloor Digital Library

இலட்சம் மக்கள் இல்லம் நிலைத்தாய்
இலாபம் தொழிலில் பொங்க நிலைத்தாய்
இலிங்கம் அருகே சிலையில் நிலைத்தாய்
இலீலை புரிய மலையில் நிலைத்தாய்

உலுக்கும் கணங்கள் செல்ல நிலைத்தாய்
நல்லூள் எனையாட் கொள்ள நிலைத்தாய்
கல்லென் மனது கரைய நிலைத்தாய்
கல்லேன் என்பர் கற்க நிலைத்தாய்

இலையில் அன்னம் இட்டு நிலைத்தாய்
இலையோ என்பர் இல்லா நிலைத்தாய்
இல்லொரு கோடிச் சொல்லில் நிலைத்தாய்
இல்லோர் இருப்போர் உள்ளில் நிலைத்தாய்

உலவும் காற்றில் மணமாய் நிலைத்தாய்
புலவர் பாட்டில் பொருளாய் நிலைத்தாய்
இலக்கியத் துள்ளே தலையாய் நிலைத்தாய்
இலக்கணத் துள்ளே இலக்காய் நிலைத்தாய்

Koviloor Digital Library

வளங்கள்	வளர	வயலூர்	வந்தாய்
வாழ்வும்	உயர	வாசல்	வந்தாய்
விளங்கா	வேதம்	விளக்க	வந்தாய்
விழா	சூரனை	வீழ்த்த	வந்தாய்
உ(வு)றவைத்	தாங்கும்	விழுதாய்	வந்தாய்
ஊ(வூ)ரைக்	காக்கும்	விளக்காய்	வந்தாய்
வெல்லும்	வித்தை	விதைக்க	வந்தாய்
வேலும்	மயிலும்	வளைக்க	வந்தாய்
வைகா	சியிலே	விசாகம்	வந்தாய்
வையம்	போற்றும்	வைபவம்	வந்தாய்
ஒ(வொ)வ்வொரு	முகமாய்	வேலா	வந்தாய்
ஓ(வோ)ங்கி	அழைத்தோம்	ஓமென	வந்தாய்
வெளவால்	மனத்தை	ஒடுக்க	வந்தாய்
வெவ்வேர்	நினைவை	விரட்ட	வந்தாய்
வக்கிர	நிலையை	மாற்றிட	வந்தாய்
வாக்கை	காக்கும்	வரம் தர	வந்தாய்

Koviloor Digital Library

விளக்கில்	அணையா	ஒளியை	அளிப்பாய்
வாளால்	சூரனை	வென்று	களிப்பாய்
களிறான்	உடன் நீ	காட்சி	அளிப்பாய்
காளீ	ஈஸ்வரி	கண்டு	களிப்பாள்
ஆளும்	அரசே	அமைதி	அளிப்பாய்
மாளுர்	வந்தால்	மோட்சம்	அளிப்பாய்
தாளேன்	தளரா	தானம்	அளிப்பாய்
தோளே	திமிரா	தோற்றம்	அளிப்பாய்
மூளை	வேண்டேன்	முக்தி	அளிப்பாய்
வேளை	வருமுன்	வேள்வி	அளிப்பாய்
கோளோன்	பதற்கும்	காப்பும்	அளிப்பாய்
கேளோம்	ஓமெனும்	கவசம்	அளிப்பாய்
பிளவே	இல்லாப்	பந்தம்	அளிப்பாய்
அளவே	இல்லா	அன்பும்	அளிப்பாய்
இளக்கம்	கொண்ட	உள்ளம்	அளிப்பாய்
விளக்கம்	தந்து	வேதம்	அளிப்பாய்

Koviloor Digital Library

பழமுதிர் சோலை பாலனைத் தொழுவேன்
ஏழாம் பிறவி எடுத்தும் தொழுவேன்
வழியில் ஒளியாய் மிளிரத் தொழுவேன்
வாழி என்றெனை வாழ்த்தத் தொழுவேன்

பழுவை இரக்கப் பாடித் தொழுவேன்
பாழூர் விட்டெனை போக்கத் தொழுவேன்
கீழென் தேகம் விழினும் தொழுவேன்
கூழே குடும்பம் குடித்தும் தொழுவேன்

ஏழை என்னை ஏற்கத் தொழுவேன்
வாழை அடிபோல் வளரத் தொழுவேன்
வாழொரு வாழ்வே வணங்கித் தொழுவேன்
சூழோர் சுற்றம் சேர்ந்தே தொழுவேன்

உழவும் குலத்தின் அழகனைத் தொழுவேன்
முழவும் கொட்டி முருகனைத் தொழுவேன்
ஒழுக்கம் விளங்க பழநியைத் தொழுவேன்
முழக்கம் ஓங்க முத்தனைத் தொழுவேன்

Koviloor Digital Library

அறுங்கள் ஓங்க முருகா உறங்காய்
ஆறாம் படையில் திருவே உறங்காய்
முறியா உறவாய் மாற்றி உறங்காய்
கூறீர் குறையெனக் கேட்டே உறங்காய்

சறுக்கா வாழ்வின் சுடரே உறங்காய்
சோறூட் டிடுமென் இறையே உறங்காய்
நீறென் நெற்றியில் உறைய உறங்காய்
மாறேன் மறவேன் மருகா உறங்காய்

சிறையில் பிரமனை மறைத்தே உறங்காய்
முறையாய் பிரணவம் உரைத்தே உறங்காய்
ஏறொரு பார்வை எடுத்தே உறங்காய்
வேறோர் தெய்வம் வேண்டே உறங்காய்

துறவம் பழனியில் ஏற்றே உறங்காய்
குறவள் ளியுடன் காட்டில் உறங்காய்
பிறக்கும் தருணம் பால்தந் துறங்காய்
துறக்கும் நிமிடம் தாள்தந் துறங்காய்

Koviloor Digital Library

தினமும் மனத்தில் நினைவாய் இனித்தாய்
தேனாய் பாகாய் தினையாய் இனித்தாய்
கனியாய் அடியிற் கரும்பாய் இனித்தாய்
தேனீ பருகாத் தமிழாய் இனித்தாய்

மினுக்கும் மாதுளை முத்தாய் இனித்தாய்
தேனூ றும்பல் சுளையாய் இனித்தாய்
தானெனும் சிந்தை தணிய இனித்தாய்
நானே என்றகம் நலிய இனித்தாய்

பனையின் வெல்லப் படிகாய் இனித்தாய்
சுனையில் நீராய் சுரந்தே இனித்தாய்
நானொரு முகத்தை நினைத்தே இனித்தேன்
நீனோ அறுமுகம் நோக்கி இனித்தாய்

வானவ் விலினும் வடிவாய் இனித்தாய்
மானவ் வள்ளியை மணந்தே இனித்தாய்
உனக்காய் மந்திரம் உரைக்க இனித்தேன்
எனக்காய் முருகா எழுந்தே இனித்தாய்

Koviloor Digital Library

மந்திர ஒலி

கருவில் இருந்தெனை காத்து அருளிடும்
குருவைப் பாடவே முருக மந்திரம்
கருவி என்னுடல் கயிறும் உன்னிடம்
உருவி டாதிட முருக மந்திரம்

குருத்து விட்டெழும் கோடி எண்ணமும்
விருத்த மாகவே முருக மந்திரம்
ஒருத்தன் உன்னிலே ஒன்றிக் கலந்திடும்
பொருத்தம் பெற்றிட முருக மந்திரம்

வருஷம் ஆயிரம் உருண்டும் ஓடினும்
உருதி உரைக்கவே முருக மந்திரம்
விருட்சம் ஆலதாய் விசாலம் ஆகிடும்
விருத்தி கூடவே முருக மந்திரம்

மருந்தும் அளித்திடும் மாலன் என்னிடம்
மருவி ஒன்றவே முருக மந்திரம்
வருட வந்திடும் வேலன் தம்மிடம்
பெருக வேணுமே முருக மந்திரம்

Koviloor Digital Library

பருந்து போல்வரும் பகையும் இன்னலும்
நெருங்க வேவிடா முருக மந்திரம்
திருந்தி வாழ்ந்திடும் ஜீவன் உள்ளிலும்
வருந்தி வேண்டவே முருக மந்திரம்

நெருப்பில் ஆடுவான் ஞானம் பெற்றிடும்
திருப்பம் காணவே முருக மந்திரம்
உருவில் பாதியாய் உறையும் உமையையும்
கருத்தில் கொள்ளவே முருக மந்திரம்

எருதின் மீதிலே ஏறும் ஈசனும்
கருதும் வேதமே முருக மந்திரம்
விருதும் வேண்டிலேன் வேண்டும் வேலனே
தருதென் நாவிலே முருக மந்திரம்

குருதி உறைந்திடும் கூடும் கரைந்திடும்
கருதி உணரவே முருக மந்திரம்
சுருதி சந்தமும் சேரும் தாளமும்
பொருதி ஒலிக்கவே முருக மந்திரம்

Koviloor Digital Library

தெருவில் ஆடிடும் சிறியன் என்னையும்
திருவும் ஆக்கவே முருக மந்திரம்
துருவி தேடியும் துலப்படா நின்பதம்
தருவி தருகுமே முருக மந்திரம்

பருவம் ஓடிடும் உருவம் மாறிடும்
துருவம் மனத்திலே முருக மந்திரம்
கருவம் கூடிடும் தருணம் விறிடும்
அருவம் உளத்திலே முருக மந்திரம்

உருக்கும் பிணியிலும் உறக்கம் தந்திடும்
உருக்கப் பாடலே முருக மந்திரம்
இருக்கும் தருணமும் இறக்கும் தருணமும்
அருகில் அழைக்கவே முருக மந்திரம்

விரும்பி வேண்டவே விளைந்த தந்திரம்
கரும்பு போலொரு முருக மந்திரம்
அரும்பும் தமிழிலே அழகு மந்திரம்
திரும்பச் சொல்லவே முருக மந்திரம்

Koviloor Digital Library

பாவாக்கம் : Dr. பெரி. இராமசாமி MS (Ortho), FRCS.

©Copy rights and publishing rights owned by :

®Dr PR Ramasamy,
16, Viswanathapuram,
Trichy 620017

Email : ramassamy@hotmail.com

Koviloor Digital Library



©Copy rights and publishing rights owned by :

®Dr PR Ramasamy,

16, Viswanathapuram,

Trichy 620017

Email : ramassamy@hotmail.com